

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு

757, மேட்டுப்பாளையம் சாலை, வடகோவை, கோயம்புத்தூர்.

**இரா.அதியமான்**

*நிறுவனர்*

*25.04.2012*

*சேரல்: மாவட்ட ஆட்சியர் அவர்கள்,*

*நாமக்கல் மாவட்டம்,*

*நாமக்கல்.*

*அய்யா,*

*ஆதித்தமிழர் பேரவையின் வணக்கங்கள். நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், களியனூர் அஞ்சல், எம்.ஜி.ஆர் நகர், அருந்ததியர் தெருவில் 1984 முதல் சர்வே எண் 58/2 பி (1.50 ஏக்கர்) நிலத்தில் 42 அருந்ததியர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மேற்கண்ட நிலத்திற்கு அருகில் உள்ள நிலங்களை சாமிநாதன் என்பவர் விலைக்கு வாங்கியுள்ளார். அவ்வாறு அவர் அந்நிலங்களை வாங்கியது முதலே, அருந்ததியர் குடியிருப்பு அருகில் இருந்தால், ரியல் எஸ்டேட் மதிப்பு குறையும் என்று கருதி அருந்ததியர் மக்களை காலி செய்யச்சொல்லி துன்புறுத்தியும் மிரட்டியும் வந்துள்ளார்.*

*அந்த இடத்தை காலி செய்ய அருந்ததியர் மக்கள் மறுக்கவே, உங்களை எப்படி காலி செய்ய வைக்கிறேன் பார் என்று மிரட்டியுள்ளார். மூன்று முறை அருந்ததியர் குடிசைகளுக்கு தீ வைத்து ஊரையே கொளுத்த முயற்சித்திருக்கிறார். ஒவ்வொரு முறையும் ஊர் முழுமையாக எரிவதற்குள்*

மக்கள் அதை தடுத்து காப்பாற்றியுள்ளனர். ஆனால் கடைசியாக கடந்த 19.04.2012 அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு சாமிநாதன் மற்றும் அவரது உறவினர் திருத்தம்பி ஆகியோர் அருந்ததியர் குடிசைகளுக்கு தீ வைத்துள்ளனர். இதில் 19 குடிசை வீடுகள் முற்றிலுமாக எரிந்து போய்விட்டன. மீதமுள்ள 23 குடிசைகள் எரிந்து போவதற்குள்ளாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் | த/பெ (அ) க/பெ | இழப்பு மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | சின்ன பழனி | வீரன் | ரூ 50,000 |
| 2 | சுப்ரமணி | ஆரான் | ரூ 40,000 |
| 3 | சுப்ரமணி | செங்கோடன் | ரூ 1,40,000 |
| 4 | வளர்மதி | ராமசாமி | ரூ 90,000 |
| 5 | சின்னம்மாள் | மாறன் | ரூ 80,000 |
| 6 | சின்னமணி | நல்லமுத்து | ரூ 1,10,000 |
| 7 | கருப்பண்ணன் | ராமன் | ரூ 60,000 |
| 8 | கிட்டான் | பழனி | ரூ 75,000 |
| 9 | கருப்பண்ணன் | ராமன் | ரூ 90,000 |
| 10 | இளயம்மாள் | ராமன் | ரூ 2,00,000 |
| 11 | சின்னம்மாள் | குருவலையன் | ரூ 90,000 |
| 12 | ஆறுமுகம் | ஊட்டி பழனி | ரூ 40,000 |
| 13 | சுப்ரமணி | ராஜன் | ரூ 50,000 |
| 14 | கருப்பண்ணன் | ஓவன் | ரூ 50,000 |
| 15 | மாதேஸ் | சுப்ரமணி | ரூ 2,00,000 |
| 16 | வீரம்மாள் | மாணிக்கம் | ரூ 2,00,000 |
| 17 | ராமலிங்கம் | தங்கவேல் | ரூ 98,000 |
| 18 | அரசாள் | சின்ராஜ் | ரூ 1,60,000 |

19 ராஜம்மாள் சண்முகம் ரூ 55,000

மேலே கண்ட விவரப்படி முற்றிலும் எரிந்து போன குடிசைகள் அனைத்தும் அருந்ததியர் மக்களுக்கு சொந்தமானவையாகும். சாமிநாதன் மற்றும் திருத்தம்பி ஆகியோர் குடிசைகளை காலி செய்யச்சொல்லி பல ஆண்டுகளாக மிரட்டியுள்ளனர். தாழ்த்தப்பட்ட சாதியினர் தங்களது நிலத்துக்கு அருகில் இருந்தால் நிலத்தின் மதிப்பு குறைந்து விடும் என்பதற்காகவே குடிசைகளை தீ வைத்து எரித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க, குடிசைகள் எரிக்கப்பட்ட சம்பவத்திற்கு 6 நாட்களாகியும் இன்று வரை வழக்கு பதியப்படவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவுமில்லை.

மனிதாபிமான அடிப்படையில் குடிசை இழந்த மக்கள் தங்கள் வீடுகளை கட்டிக்கொள்கிற வரையில் மழையில் நனையாமல் தங்க வைப்பதற்கான தற்காலிக ஏற்பாடுகள் கூட செய்து தரப்படவில்லை. அப்பகுதி மக்கள் மழையில் நனைந்து கொண்டே உணவு சமைக்கவும் வழியில்லாமல், தூங்கவும் வழியில்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்றனர்.

எனவே,

1) மேற்கண்ட அருந்ததியர் குடிசைகள் எரிக்கப்பட்ட சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது உடனடியாக வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ய உத்தரவிடும்படியும்,
2) குடிசை இழந்த மக்களின் வீடுகள் தயாராகிற வரையில் தற்காலிகமாக தங்குவதற்கு அதே பகுதியில் மழையில் நனையாத வகையிலும் தூங்குவதற்கு வாய்ப்பான வகையிலும் தற்காலிகக் கொட்டகை ஒன்றினை அமைத்து தருமாறும்,
3) வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படி குடிசை இழந்த மக்களுக்கு எரிந்து போகாத வீடுகள் கட்டித்தரும்படியும்

ஆதித்தமிழர் பேரவை சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலைப் பணியில்

(இரா.அதியமான்)

நிறுவனர்